# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 112/மா/2022**

**நாள்: 19.09.2022**

திரு. R. மயில்சாமி,
புதுவிளாங்குடி,
மதுரை. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மண்டலம் - 02,
மதுரை மாநகராட்சி,
மதுரை. – எதிர்மனுதாரர்

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 25.07.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 26.07.2022–ல் பெறப்பட்டு 112/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 25.07.2022 நாளிட்ட தனது மனுவில் :

" மதுரை மாநகராட்சி வார்டு 1, மண்டலம் 2 (வடக்கு) புது விளாங்குடி பொற்றாமரை நகரில் மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான பூங்காவிற்கு புல எண் 97/1G மற்றும் 97/1Fல் சுமார் 10 ½ சென்ட்க்கு மேலாக இடம் உள்ளது. இவ்விடத்தின் சில பகுதிகள் ஆக்கிரமிப்பில் உள்ளது. இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றியும் பூங்கா இடத்தில் பூங்கா அமைத்து தருவதுடன் நான்குபுறமும் முள்கம்பி வேலி அமைத்து அத்துமால் காண்பித்து கல் ஊன்ற வேண்டும் என்று கோரிக்கை மனு 13.07.2022 தேதியில் மதுரை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு பதிவு தபாலில் மனு அனுப்பியிருந்தேன்.

எனவே மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்கள் மேற்படி புல எண்களில் உள்ள சில ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்றியும், முள்கம்பி வேலி

அமைத்து இடத்தை மதுரை மாநகராட்சி பூங்கா இடம் என்று விளம்பர பலகை வைத்தும், விரைவாக அவ்விடத்தில் பூங்கா அமைத்து தரவும் மதுரை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு வேண்டிக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார். மேலும் பொற்றாமரை நகரில் உள்ள பெரியவர் முதல் சிறியவர்வரை உள்ளவர்களுக்கு பொழுது போக்கிற்கு இடம் இல்லையென்பதால் பொற்றாமரை நகர் பகுதி பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள் என்றும் ஆதலால் மாண்புமிகு உச்சநீதிமன்ற வழக்கு எண்.8519/2006 தீர்ப்புரை நாள் 07.04.2009, 29.09.2009 மற்றும் 16.02.2010ன்படியும் மற்றும் தமிழக அரசாணை (நிலை) எண்.427 வருவாய் (நி.மு.6(2) துறை நாள் 13.09.2010 மற்றும் முதன்மை செயலாளர் மற்றும் நில நிருவாக ஆணையர், ட்டி/சிறப்பு–2/258–20/2009 நாள் 10.03.2010ன்படி மேற்படி புல எண்களில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான பூங்கா (Park) இடத்தை பட்டாவில் உள்ளபடி முழுமையாக அளந்து அத்துமால் காண்பித்து "கல் ஊன்றி" ஆக்கிரமிப்புகளை முழுமையாக விரைவாக அகற்றிவிட்டு பொதுமக்கள் நலன் கருதி பூங்கா (Park) அமைத்து தரவும் கோரியுள்ளார்.

2. மனுதாரரது புகார் மனு மீது அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற 01.08.2022 நாளிட்ட கடிதம் மூலம் ஆணையாளரிடம் கோரப்பட்டது.

3. மதுரை மாநகராட்சி உதவி ஆணையாளர், மண்டலம்–2(வடக்கு) தனது 23.08.2022 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" மதுரை மாநகராட்சி, மண்டலம்–2 (வடக்கு) வார்டு 1ல் 2 பிட் கிராமத்தில் பொற்றாமரை நகர் புல எண்கள் 97/1F. 97/1G மற்றும் செந்தாமரை கார்டன் புல எண் 56/1D, 3A1D ஆகியவற்றில் ஆக்கிரமிப்புகளை அகற்றி பூங்கா அமைப்பதற்காக திரு. மயில்சாமி என்பவரிடமிருந்து மனு வரப்பெற்றது.

விளாங்குடி 2 பிட் கிராமத்தில் பொற்றாமரைநகர் மற்றும் செந்தாமரை கார்டன் ஆகிய பெயர்களில் அமைக்கப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட புலங்களை ஏற்கனவே மாநகராட்சியால் வருவாய்துறையினர் மூலம் உட்பிரிவுகள் செய்து பட்டா எண் 1850,1851 புல எண்கள் 97/1F பரப்பு 0.01.22 ஏர்ஸ், 97/1G பரப்பு 0.02.99 ஏர்ஸ், பட்டா எண் 1961, புல எண் 56/1D. 3A1D பரப்பு 0.11.03 ஏர்ஸ், ஆணையாளர், மதுரை மாநகராட்சி – பூங்கா என வருவாய் கிராம கணக்குகளில் மாறுதல்கள் செய்யப்பட்டு, மேற்கண்டுள்ள பூங்காக்களை மாநகராட்சி சொத்துப்பட்டியலில் இணைத்து பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்டுள்ள பூங்காக்களை இவ்வலுவலகப்பணியாளர்கள் மூலம் வருவாய் கிராம கணக்குகளில் உள்ளவாறு நில அளவை பணி செய்து தற்காலிக சிறிய அளவிலான ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, அதனை தொடர்ந்து மாநகராட்சிக்கு சொந்தமான பூங்கா என்ப்தற்கான அறிவிப்பு பலகைகளும் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

விளாங்குடி 2 பிட் கிராமம் விஸ்தரிப்பு பகுதியாக இருந்து மதுரை மாநகராட்சியின் பழைய மண்டலம் 1ல் நிர்வகிக்கப்பட்டு, நிர்வாக ரீதியாக வார்டு வரையரை செய்யப்பட்டு தற்போது மண்டலம் 2 (வடக்கில்) இணைக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இதில் பொற்றாமரைநகர் விரிவாக்கம் புல எண் 97/1F. 97/1G மனைப்பிரிவு அமைந்துள்ள பகுதி கீழ்புறமும் மற்றும் மேல்புறமும் அடர்ந்த கருவேல மரங்களாலும், தென்புறம் வைகை நதியினாலும் சூழ்ந்துள்ள பகுதியாக உள்ளது. இப்பூங்காவிற்கான புலத்திலும் அறிவிப்பு பலகை நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் முள்வேலி அமைத்தல் தொடர்பாக நிதி நிலமையினை கருத்தில் கொண்டு பின்வரும் காலங்களில் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 06.09.2022 அன்று தூத்துக்குடி முகாமில் நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 01.09.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

5. மனுதாரர் 06.09.2022 அன்று தூத்துக்குடி முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

" மதுரை மாநகராட்சி, வார்டு–1, மண்டலம்–2(வடக்கு) புதுவிளாங்குடி, பொற்றாமரை நகரில் மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான பூங்காவிற்கு, புல எண்.97/1G மற்றும் 97/1Fல் சுமார் 10 ½ சென்ட்க்கு மேலாக இடம் உள்ளது. இவ்விடத்தின் சில பகுதிகள் தனியாரின் ஆக்கிரமிப்பில் உள்ளது. இவ்வாக்கிரமிப்புகளை அகற்றியும், அந்த இடத்தில் பூங்கா அமைத்து தருவதுடன் நான்குபுறமும் முள் கம்பி வேலி அமைத்து அத்துமால் காண்பித்து கல் ஊன்ற வேண்டும் என மதுரை மாநகராட்சி ஆணையருக்கு 13.07.2022 அன்று கோரிக்கை மனு அனுப்பியிருந்தேன். ஆனால், மாநகராட்சியால் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்றி பூங்கா அமைத்திடவும், பூங்கா அமைக்கும்வரை அங்கு முள்கம்பி வேலி அமைத்து அவ்விடத்தை மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான பூங்கா இடம் என தெரிவித்து விளம்பரப் பலகை வைத்திடவும் தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறும் இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. மதுரை மாநகராட்சி, செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் இருவரும் 06.09.2022 அன்று தூத்துக்குடி முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:

" மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள மதுரை மாநகராட்சி, வார்டு–1, மண்டலம்–2 (வடக்கு) புதுவிளாங்குடி, பொற்றாமரை நகரில் புல எண்.97/1G மற்றும் 97/1F–ல் மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான பூங்காவிற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் ஆக்கிரமிப்பாளர் நில ஆக்கிரமிப்பு செய்வதை தடுத்திடும் பொருட்டு அந்த இடத்தில், இவ்விடம் மாநகராட்சிக்கு சொந்தமானது என போர்ட் வைக்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மேற்கண்ட இடத்தில் ஆக்கிரமிப்புகள் உள்ளன என தெரிவித்துள்ளதையடுத்து, புல எண்.97/1G மற்றும் 97/1F–ல் மீண்டும் சர்வேயர் மற்றும் உதவி செயற்பொறியாளர் (திட்டம்) ஆகியோரைக் கொண்டும் அளவீடு செய்தும், பட்டா எண், சர்வே எண் மற்றும் சப் டிவிஷன் எண் ஆகியவற்றைக் கொண்டு ஒப்பீடு செய்தும், ஆக்கிரமிப்பு இருப்பின் அதனை 1 மாத காலத்திற்குள் அகற்றிட தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் மதுரை மாநகராட்சி உதவி ஆணையர் (வடக்கு) அவர்களின் 2.9.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம். இந்நேர்வு தொடர்பான புகைப்பட நகல்களையும் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம் " என தெரிவித்துள்ளனர்.

7. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் மதுரை மாநகராட்சி செயற்பொறியாளர், உதவிப்பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் மதுரை மாநகராட்சி மண்டலம் 02ன் உதவி ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் தனது மனுவில் மதுரை மாநகராட்சி வார்டு 1, மண்டலம்–2(வடக்கு) புதுவிளாங்குடி பொற்றாமரை நகரில் மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான பூங்காவிற்கு புல எண் 97/1G மற்றும் 97/1Fல் சுமார் 10½ சென்ட்க்கு மேலாக உள்ளது என்றும் மேற்படி இடத்தின் சில பகுதிகள் ஆக்கிரமிப்பாளர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து ஆக்கிரமிப்புகளை

அகற்றவும் பூங்கா இடத்தில் பூங்கா அமைத்து தருவதுடன் நான்குபுறமும் முள்கம்பி வேலி அமைத்து அத்துமால் காண்பித்து கல் ஊன்ற வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

உதவி ஆணையர், மதுரை மாநகராட்சி மண்டலம்–2(வடக்கு) தனது அறிக்கையில் விளாங்குடி 2 பிட் கிராமத்தில் பொற்றாமரைநகர் மற்றும் செந்தாமரை கார்டன் ஆகிய பெயர்களில் அமைக்கப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட புலங்களை மாநகராட்சியால் வருவாய்துறையினர் மூலம் உட்பிரிவுகள் பட்டா எண் 1850, 1851 புல எண்கள் 97/1F பரப்பு 0.01.22 ஏர்ஸ், 97/G பரப்பு 0.02.99 ஏர்ஸ், பட்டா எண் 1961, புல எண் 56/1D, 3A1D பரப்பு 0.11.03 ஏர்ஸ் ஆணையாளர், மதுரை மாநகராட்சி, பூங்கா என வருவாய் கிராம கணக்குகளில் மாறுதல்கள் செய்யப்பட்டு மேற்கண்ட பூங்காக்களை மாநகராட்சி சொத்துபட்டியலில் இணைத்து பராமரிக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்துள்ளார். மேலும் விளாங்குடி 2 பிட் கிராமம் விஸ்தரிப்பு பகுதியாக இருந்து மதுரை மாநகராட்சியின் பழைய மண்டலம்–1ல் நிர்வகிக்கப்பட்டு, நிர்வாக வார்டு வரையறை செய்யப்பட்டு தற்போது மண்டலம்–2 (வடக்கு)ல் இணைக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருவதாகவும் இதில் பொற்றாமரை நகர் விரிவாக்கம் புல எண் 97.1F, 97/1G k மனைப்பிரிவு அமைந்துள்ள பகுதி கீழ்புறமும் மற்றும் மேல்புறமும் அடர்ந்த கருவேல மரங்களாலும், தென்புறம் வைகை நதியினாலும் சூழ்ந்துள்ள பகுதியாக உள்ளது என்பதும் இப்பூங்காவிற்கான புலத்திலும் அறிவிப்பு பலகை நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது என்பதும், மேலும் முள்வேலி அமைத்தல் தொடர்பாக நிதிநிலைமையினை கருத்தில் கொண்டு பின்வரும் காலங்களில் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் ஆணையரின் அறிக்கை மற்றும் செயற்பொறியாளர், உதவிப்பொறியாளர் ஆகியோரது வாக்குமூலத்திலிருந்தும் அறிய முடிகிறது.

செயற்பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளர் தங்களது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு மேற்கண்ட பொற்றாமரை நகரில் பூங்கா பட்டா எண் 1851, புல எண் 97/1G மற்றும் பட்டா எண் 1850, புல எண் 97/1F–ல் மாநகராட்சி நில அளவையரைக்கொண்டு அளவீடு செய்தும், பட்டா எண், சர்வே எண் மற்றும் சப்டிவிசன் எண் ஆகியவற்றைக்கொண்டு ஒப்பீடு செய்தும் ஆக்கிரமிப்புகள் ஏதேனும் இருப்பின் 1 மாதத்திற்குள் விதிகளுக்குட்பட்டு ஆக்கிரமிப்புகளை அகற்றிட உரிய நடவடிக்கை எடுத்து, பூங்காவை சுற்றிலும் நான்குபுறமும் முள்கம்பி வேலி அமைத்து, மாநகராட்சிக்கு சொந்தமான இடம் என்ற அறிவிப்பு பலகை வைத்திடுமாறும் மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

இந்நேர்வில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சம்மந்தமான அறிக்கையை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் மாநகராட்சி ஆணையாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

**The Commissioner, Madurai Corporation is directed to survey all the lands vested with the Corporation and ensure that the lands are not grabbed by encroachers, antisocial elements and land mafias and are kept in the right custody of the Local Body. If the field officials are effective, pro-active and sensitive, such petitions will not be lodged with this Forum. The Zonal Officials should be suitably instructed to keep all the Corporation land parcels free of encroachments and land grabbing and unwanted conversion. This should be the personal responsibility of the Zonal Officials concerned during their tenure in their areas. Complicity and collusion of any kind by the official machinery can not be entertained and strict disciplinary action should be launched against all the guilty. If the social activists and public spirited petitioners have to bring out such encroachments to the notice of this Forum then what is the Corporation's role in protecting its own lands through their field Zonal authorities? Such**

**lethargy and indifference are condemned in strong terms. The land involved in this particular case has to be freed of encroachments and fenced as early as possible.**

2022-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 19-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. R. மயில்சாமி,
   மனை எண்.5, அய்யப்பன் தெரு,
   செம்பருத்தி நகர், புதுவிளாங்குடி, மதுரை – 18.
2. ஆணையாளர்,
   மதுரை மாநகராட்சி,
   மதுரை.
3. உதவி ஆணையர்,
   மண்டலம் - 02,
   மதுரை மாநகராட்சி,
   மதுரை மாவட்டம்.
4. இணை இயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

19/9/22
செயலாளர்.